**STC .No. 241/2025**
**நாள் – 07-10-2025**

பு.**சா.1 – திரு. தியாகராஜன் சாட்சி சத்தியப்பிரமாணத்தின் மூலம் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை )**

**(எதிரி ஆஜர்).**

புகார், அறிவிப்பு மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் எதிரி எந்த தேதியில் பணம் கேட்டார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தேதி ஞாபகம் இல்லை . 2024 மே மாதம் கேட்டார். எந்த தேதியில் பணம் கொடுத்தேன் அறிவிப்பில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்யியுள்ளேன். நான் அவ்வாறு சொல்ல வில்லை என்றாலும் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. அறிவிப்பில் எதிரியின் வங்கி கணக்கு ஆர்.எம் காலணி கிளையில் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அறிவிப்பில் காசோலையை எதிரி என் வீட்டில் கொடுத்தாக சொல்யியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் வீட்டில் வைத்து கொடுத்தார். SBI R.M Colony கிளை என என் வங்கி கணக்க முகவரியை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. IOB தாடிக்கொம்பு கிளையில் கணக்கு உள்ளது. சாட்சியிடம் அறிவிப்பு காட்டப்பட்டு மேற்கண்டவாறு உள்ளதா என கேட்கப்பட்டது. சாட்சி அதை பார்வையிட்டு விட்டு இல்லை என குறிப்பிடுகிறார். மேற்படி அறிவிப்பில் என் வீட்டில் வைத்து காசோலை கொடுத்தாக உள்ளது என்றால் சரிதான். அதே போல் ரூ.10,00,000 /- என் வீட்டில் வைத்து கொடுத்தாக உள்ளது என்றால் சரிதான் ஆனால் அவர் வீட்டில் வைத்துதான் கொடுத்தேன். அறிவிப்பில் பணம் எந்த தேதியில் கொடுத்தேன் என குறிபிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அறிவிப்பில் SBI R.M Colony கிளையில் காசோலையானது Exceed Aragement என்ற காரணத்திற்காக திருப்ப பட்டது என்றால் சரிதான். ஆனால் SBI நேருஜி நகர் கிளை. நான் வழக்கில் தாக்கல் ரிட்டன் மெமோவை SBI வங்கியில் இருந்து கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றாலும் IOB வங்கியில் வழங்கப்பட்டதாக சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. வழக்றிஞர் அறிவிப்பை வட்டியுடன் பணத்தை திருப்பி செலுத்த கேட்டு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி பதிலறிவுப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அறிவிப்பில் என்னுடைய வங்கி SBI என்றும் புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் IOB என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அறிவிப்பில் எதிரியின் வங்கி கிளை R.M Colony என்றும் புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் நேருஜி நகர் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன். மீடியேட்டர் தொழிலுக்கு பெயர் இல்லை. நிரந்தர வருமாணம் இல்லை என்றால் சரிதான். மனைவி பெயர் சாந்தி. எதிரியின் அம்மா ஜவுளி கடை வைத்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி கடையில் நானும் என் மனைவியும் பல வருடமாக அமர்ந்து வட்டிக்கு பணம் கொடுத்து வந்தோம் என்றால் சரியல்ல. என் மனைவிக்கும் எதிரியின் அம்மாவுக்கும் தான் பரிவர்த்தனை உள்ளது என்றால் சரியல்ல. எதிரியின் அம்மா சீட்டு பிடித்து வந்தார் என்றால் இல்லை. நானோ என்

மனைவியோ எதிரியின் அம்மாவிற்கு பணம் வட்டிக் கொடுத்திருந்தோமா என்றால் இல்லை. அவரிடம் சீட்டு போட்டிருந்தோமா என்றால் இல்லை. என் மொபைல் எண்.9095409009 என்றால் சரிதான். என்னுடைய மொபைல் எண்ணிலிருந்து எதிரியிடம் பேசியுள்ளேனா என்றால் இல்லை. என் மனைவியின் மொபைல் எண்.9095254826 என்றால் சரிதான். மேற்படி இரு எண்களுக்கும் எதிரியின் அம்மா எந்த பரிவர்த்தனையும் வைக்க வில்லை என்றால் சரிதான். நான் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும் பின்பும் எதிரியிடம் மேற்படி மொபைல் மூலம் பேசவில்லை என்றால் சரிதான். எதிரியின் செல் நம்பர் என்னிடம் இல்லை என்பதால் தான் பேசவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் செல் மூலம் பேசவில்லை என்றால் சரிதான். என் மனைவி எந்த வேலையும் செய்யவில்லை என்றால் சரிதான். ரூ.20,000 க்கு மேற்பட்ட தொகையை வங்கி பரிவர்த்தனை மூலம் செய்யவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு நான் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நேரடியாக கொடுத்தேன். நான் வருமான வரி கட்டுகிறேன். என் மனைவி கட்டவில்லை. நீதிமன்றம் கேட்கும் பட்சத்தில் நான் தாக்கல் செய்கிறேன். நான் கொடுத்த 10 இலட்சத்தை வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேன். அதில் என் மகன் அனுப்பிய தொகைதான் அதிகம் என்றால் சரிதான். அந்த 10 இலட்சம் என்னுடைய பணம் இல்லை என்றால் என் மனைவியிடம் வாங்கி கொடுத்தேன். என் மனைவிக்கு மகன் கொடுத்த பணம் என்றால் சரிதான். என்னுடைய மற்றும் என் மனைவியின் வங்கி கணக்கு அறிக்கையை நீதிமன்றம் கேட்கும் பட்சத்தில் தாக்கல் செய்கிறேன். எனக்கு எந்த வேலையும் இல்லை என்றாலும் எனக்கு ரூ.10 இலட்சம் கொடுக்கும் அளவிற்கு வருமான மூலம் இல்லை என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள கையொப்பம் ஒரு மையாகவும் மற்ற நிரப்பப்பட்ட பகுதிகள் வெறுஒரு மையாகவும் உள்ளது என்றால் சரியல்ல. ஒரே மைதான். வெவ்வேறு மையாக உள்ளது என்றாலும் நான் தவறாக குறிப்பிடுகிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் எந்த பரிவர்த்தனையும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் அம்மாவிற்கும் எங்களுக்கும் தான் பரிவர்த்தனை என்றால் சரியல்ல. இந்த வழக்கு பரிவர்த்தனைக்காக எதிரியிடமிருந்து காசோலை தவிற வேறு ஆவணம் வாங்கவில்லை. எதிரிக்கு அதிகாலை 6 மணியவில் பணம் கொடுத்தேன். நான் எதிரிக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் அம்மாவிடம் தான் பரிவர்த்தனை இருந்தது என்றாலும் எதிரியின் காசோலையை தவறாக பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி மே மாதம் அவசர தேவை என்று தான் பணம் கேட்டார் என புகார் மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் 3 மாதம் கழித்து பணம் கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல 2 மாதம் கழித்து கொடுத்தேன். எதிரியின் அம்மாவின் கனரா வங்கி மற்றும் இந்தியன் வங்கி காசோலை என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல. எதிரி புதுக்கோட்டையில் V.A.O வாக வேலை

பார்க்கிறார் என்றாலும் இருவரை என்னை சந்தித்து பேசவில்லை என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு நான் மொழிய தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு வாக்குமூலம் கொடுத்தவருக்கு எடுத்துக்காட்டி சரியென அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.10.07 16:14:14 +0530

Judicial Magistrate No.I
Dindigul.